सत्यमेव जयते

**இந்திய உயர் ஆணையம்**
**கோலாலம்பூர்**

# <u>செய்தி அறிக்கை</u>

## <u>தூதரக சேவைகளுக்கு ‘இணைய முற்பதிவு முறை’</u>
## <u>மே 9, 2019 முதல் அமல்</u>

தூதரக சேவைகளை ஒருங்கிணைக்கும் தொடர் முயற்சிகளில் ஒன்றாக, வரும் மே 9, 2019 (வியாழக்கிழமை) முதல், கோலாலம்பூரில் அமைந்துள்ள இந்திய உயர் ஆணையம் ‘இணைய முற்பதிவு’ முறையை அமலுக்குக் கொண்டு வருகிறது. தூதரக சேவைகளைப் பெற விரும்பும் விண்ணப்பதார்களின் காத்திருப்பு நேரத்தைக் குறைப்பதே ‘இணைய முற்பதிவு’ முறையின் நோக்கமாகும். இந்த நவீன முறையின் பயன்பாட்டால் இந்திய உயர் ஆணையம் வழங்கும் பல்வேறு சேவைகள் துரிதப்படுத்தப்படும்.

2. இனி இந்திய உயர் ஆணையத்தின் சேவைகளைப் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள், சிரமங்களைத் தவிர்ப்பதற்குத் தங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொண்ட பின்னரே அலுவலகத்திற்கு வரவேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

3. இது தொடர்பான மேல் விவரங்களுக்கும், இணைய முற்பதிவு செய்வதற்கும் https://hcikl.gov.in/ எனும் இந்திய உயர் ஆணைய அகப்பக்கத்தை வலம் வாருங்கள்.

***

03 மே 2019
கோலாலம்பூர்